# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.37/2018 நாள். 30.11.2018

## தனி அலுவலர் அவர்களின் நவம்பர் 2018 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

30.11.2018ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் நவம்பர் 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | நவம்பர் 2018 | 8 | 6 | 2 | 9 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நவம்பர் 2018 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதிகளில் தற்போது கதவரலதக மழை பெய்து வருதாலும் நகரில் ஆங்காங்கே ஈக்கள் அதிகமாக உள்ளதாலும், நகராட்சி குப்பை கொட்டும் இடத்தில் துர்நாற்றம் வீசுவதாலும் அவைகளை கட்டுப்படுத்த கிருமி நாசினி தெளிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் அம்மா உணவகம் உள்ளிட்ட நகரின் முக்கிய பகுதிகளில் ஈக்களின் தொல்லையை கட்டுப்படுத்தவும், கிருமி நாசினி மருந்து வாங்க அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதி வழங்கலாம். ( ந.க.எண். 606 /2018/எப்1 )

**பொருள் எண். 4**

29.11.2018 அன்று நடைபெற்ற விலைப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | ஜார்ஜ் டவுன் | அன்னை சிவகாமி |
|---|---|---|---|

| வ. எண். | விபரம் | பலநோக்கு தொழில் கூட்டுறவு சங்கம், எண்.9–அ, தேனாம்பேட்டை ராமசாமி தெரு, கொண்டிதோப்பு, சென்னை – 79. | மகளிர் தொழில் கூட்டுறவு சங்கம், எண்.1, முதல் லேன், அண்ணா பிள்ளை தெரு, சென்னை – 79. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | கொசு புழுக்கள் இல்லா இல்லம் என அறிவிக்க ஸ்மைலி ஸ்டிக்கர் (Smiley Stickers) | 10.00 | 10.60 |
| 2. | பிளாஸ்டிக் விழிப்புணர்வு மல்டிகலர் நோட்டீஸ் | 7.25 | 7.60 |
| 3. | மூவிதழ் இரசீது(Challan) | 300.00 | 310.00 |

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

அரசாணை (MS) எண்.72 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.12.07.2017ன்படி அடையாறு ஆற்றினை சீரமைக்கவும் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் கால்வாய் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (Anakaputhur storm water drain and divert to a modular STP) ரூ.15.65 கோடி CRRT திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சென்னை நதிநீர் சீரமைப்பு திட்டம் (CRRT) ஆய்வு கூட்டத்தில் மேற்படி பணிக்கு பதிலாக மேற்கூறிய தொகையினை அனகாபுத்தூர் நகராட்சி எல்லை முழுவதுமாக பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திடவும், இத்திட்டத்திற்கான கூடுதல் நிதியை அரசு நிதியிலிருந்து பெற்று பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 05 அவர்களின் கடித ந.க.எண.12147/2018/பாசாதி1 நா.06.06.2018ல் அனகாபுத்தூர் நகராட்சி சென்னையை ஒட்டி அமைந்துள்ளதால் அதிகளவில் குடியிருப்புகள் உருவாகி உள்ளதாலும், இக்குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அடையாறு ஆற்றில் கலந்து ஆற்று நீர் மாசுபடுவதுடன் நிலத்தடி நீரும் மாசுபடும் நிலை உள்ளதாகவும், பொது மக்கள் நலன் கருதி அனகாபுத்தூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யும் பணியினை Tamil Nadu Water Investment Company Limited (TWIC) கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை ரூ.69.69 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தொகை ரூ.69.69 கோடியில் CRRT திட்ட நிதி ரூ.15.65 கோடி போக மீத தொகை ரூ.54.04 கோடியினை IUDM 2018–19 திட்டத்தின் கீழ் மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தொகை ரூ.69.69 கோடியில் CRRT திட்ட நிதி ரூ.15.65 கோடி போக மீத தொகை ரூ.54.04 கோடியினை IUDM 2018–19 திட்டத்தின் கீழ் மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 6**

29.11.2018ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதிகளில் உள்ள கால்வாய்களில் உள்ள மண் அடைப்புகளை தூர் வாரி அகற்றும் பணி | 3.00 | வி.குணாளன்<br>கே.உமாபதி | 0.10 % குறைவு<br>1.25 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண். 7**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பபட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் பொது நிதியில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி உரக்கிடங்கில் குப்பை தரம் பிரித்தல் பணி (Bio Mining) மேற்கொள்ள 50 KVA மின் இணைப்பு பெறுதல் பணி | 4.00 |
| 2. | வார்டு எண்.4 அண்ணா தெருவில் சிறுபாலம் மற்றும் விடுபட்ட பகுதிகளில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 3.25 |
| 3. | பம்ப் அவுஸ் சாலையில் அமைந்துள்ள நியாய விலை கட்டிடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 4.20 |
| 4. | வார்டு எண்.9 பஜார் தெருவில் அமைந்துள்ள ஆடு அறுக்கும் கூடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் | 4.00 |

| | | |
|---|---|---|
| | மராமத்து பணி மேற்கொள்ளுதல் | |
| 5. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 43 எண்ணிக்கையிலான உயர் கோபுர விளக்கினை ஒரு வருட காலத்திற்கு பழுது பார்த்து பராமரித்தல் பணி | 9.00 |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.8**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19ன் கீழ், வார்டு எண்.7மெயின் ரோடு ஜங்சனில் ஆழ்துளை கிணற்றுடன் சிறுமின் விசை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல் (அண்ணா நகர் 1வது பிரதான சாலை மற்றும் கலைஞர் தெரு சந்திப்பு) ரூ2.57/– இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.1162/2018/அ3 நாள்.31.10.18ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு இவ்வலுவலக ந.க.எண்.1176/2018/இ1 நாள்.31.10.2018ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 | | | | |
| 1 | வார்டு எண்.7மெயின் ரோடு ஜங்சனில் ஆழ்துளை கிணற்றுடன் சிறுமின் விசை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல்(அண்ணா நகர் 1வது பிரதான சாலை மற்றும் கலைஞர் தெரு சந்திப்பு) | 2.57 | ஓசோன் டெக்னாலஜிஸ் ஹைடெக் ஸ்வீட் வாட்டர் டெக்னாலஜிஸ் (பி) லிட் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |

**அலுவலக குறிப்பு :** நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் பார்வையிட்டு அனுமதியளிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.9**

அரசாணை (MS) எண்.72 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.12.07.2017ன்படி அடையாறு ஆற்றினை சீரமைக்கவும் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு அனகாபுத்தூர் நகராட்சி

பகுதியில் கால்வாய் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (Anakaputhur storm water drain and divert to a modular STP) ரூ.15.65 கோடி CRRT திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சென்னை நதிநீர் சீரமைப்பு திட்டம் (CRRT) ஆய்வு கூட்டத்தில் மேற்படி பணிக்கு பதிலாக மேற்கூறிய தொகையினை அனகாபுத்தூர் நகராட்சி எல்லை முழுவதுமாக பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திடவும், இத்திட்டத்திற்கான கூடுதல் நிதியை அரசு நிதியிலிருந்து பெற்று பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 05 அவர்களின் கடித ந.க.எண.12147/2018/பாசாதி1 நா.06.06.2018ல் அனகாபுத்தூர் நகராட்சி சென்னையை ஒட்டி அமைந்துள்ளதால் அதிகளவில் குடியிருப்புகள் உருவாகி உள்ளதாலும், இக்குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அடையாறு ஆற்றில் கலந்து ஆற்று நீர் மாசுபடுவதுடன் நிலத்தடி நீரும் மாசுபடும் நிலை உள்ளதாகவும், பொது மக்கள் நலன் கருதி அனகாபுத்தூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யும் பணியினை Tamil Nadu Water Investment Company Limited (TWIC) கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை ரூ.78.80 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 8 இடங்கள், அனகாபுத்தூர் மற்றும் பம்மல் நகராட்சிக்கு சேர்த்து கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைக்கு வார்டு எண்.16ல் தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை பாதாள சாக்கடை திட்ட பணிக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை பாதாள சாக்கடை திட்ட பணிக்கு வழங்கலாம்.

**பொருள் எண்.10**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த ஓட்டுநர்கள் 5 நபர்கள் சப்ளை செய்ய 2018 – 19ம் ஆண்டிற்கு ஒப்பந்தாரர் திரு. வி. குணாளன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி செலவு தொகை ரூ.7.50 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டது. ஜுன் 2018ல் புதியதாக 9 டாடா ஏஸ் வாகனம் வாங்கப்பட்டு ஒப்பந்த வாகனங்கள் 4யை ரத்து செய்துள்ளதால் கூடுதலாக 6 ஓட்டுநர்களை நியமனம் செய்து சப்ளை செய்ய மேற்படி ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தீர்மான எண்.353 நாள் 29.06.2018ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நிதி கூடுதலாக ஓதுக்கப்படவில்லை . எனவே நவம்பர் மாதம் 2018 முதல் மார்ச் 2019 வரையுள்ள 5 மாதங்களுக்கு தொடர்ந்து 11 ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு ஊதியம் வழங்கிட உத்தேச செலவின தொகை ரூ. 7.00 இலட்சம் செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.11</u>**

அனகாபுத்தூா் நகராட்சி 18 வாா்டு பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளுக்கான Dengue Breading checkers என்ற கொசு ஒழிப்பு பணியாளா்கள் 41 நபா்கள் பேன்சி ஏஜென்சி நிறுவனத்தின் மூலம் சப்னை செய்யப்பட்டு வந்தது. நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை -05, மாவட்ட ஆட்சித் தலைவா் காஞ்சிபுரம் மற்றும் நகராட்சி நிா்வாக மண்டல இயக்குநா் அவா்களின் ஆய்வு கூட்டங்களில் கொசு ஒழிப்பு களப்பணியாளா்களை தொடா்ந்து பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டது மேற்படி அறிவுறுத்தலின்படி கொசு ஒழிப்பு பணியினை டிசம்பா் 2018 மற்றும் ஜனவரி 2019 மாதங்களுக்கு கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.9.00 இலட்சம் செலவு செய்யவும் ஆணையா் மற்றும் தனி அலுவலா் அவா்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலா்
அனகாபுத்தூா் நகராட்சி